**<u>அசல் வழக்கு எண். 63/2022</u>**

06.08.2025

**பெயர் – மாசிலாமணி** (PW1)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

30.06.2025 ம் தேதி குறுக்கு விசாரணை பாரா 1 முதல் 3 பதிவு செய்யப்பட்டது. இன்று பாரா 4 முதல் பதிவு செய்யப்படுகிறது.

(4) பிரதிவாதிக்கு எதிராக நான் தாக்கல் செய்த இ.ம.எண்.220/2022 இடைக்கால உறுத்துக்கட்டளை மனு 31.10.2023 ம் தேதி விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அதைப் பற்றி தெரியாது. அதன் பேரில் மேல் முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொய்யான சங்கதிகளுடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிராம நிர்வாக அலுவலர் சோமசுந்தரம் என்பவருடன் எனக்கு நன்கு பழக்கம் உண்டு என்றால் சரியல்ல இன்று வரை விரோதமாகத் தான் உள்ளார். வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும், எனக்கும் சோமசுந்தரத்திற்கும் நன்கு பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. சோமசுந்தரம் பொருளாதாரா ரீதியாக வசதியானவர் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு காடு தோட்டம் உள்ளது. சோமசுந்தரம் என்னிடம் மீண்டும் எங்கள் சொத்தை விற்றுவிடச் சொல்லி சொன்னார். நாங்கள் மறுத்துவிட்டோம். சோமசுந்தரம் வசதியான நபர் என்றும் செல்லம்மாள் குடியிருக்கும் தாவாச் சொத்தை மீண்டும் விலைக்கு கேட்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல சொத்தில் நாங்கள் தான் குடியிருக்கிறோம். 01.08.2022 ம் தேதி சோமசுந்தரம் தாவாச் சொத்தை விலைக்கு கேட்டதாக பொய்யாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

(5) சோமசுந்தரம் என்பவர் மீது நாங்கள் ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். வழக்கு எண் அ.வ.எண். 61/2019 என்றால் வழக்கு எண் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 ம் பக்கத்தில் 13 மற்றும் 14 வரிகளில் எனது சுவாதீனத்திலும் அனுபவித்திலும் இருந்து வருகிற என்ற குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட தேதி வரை தாவாச் சொத்து வா.சா.ஆ.1 ஆவணப்படி சோமசுந்தரம் என்பவரது சுவாதீனத்தில் தான் இருந்து வந்துள்ளது என்றால் சரிதான்.

(6) தாவாச் சொத்தின் சர்வே எண் தெரியாது. கிரையம் பெற்ற சமயத்தில் தாவாச் சொத்தில் வீடு இருந்தது என்றால் சரியல்ல காலி இடமாகத்தான் கிரையம் பெற்றேன். சோமசுந்தரம் என்பவரிடம் இருந்து நான் கிரையம் பெற்றதாக சொல்லப்படும் சொத்தில் கிரையத்திற்கும் முன்பும் பின்பும் தற்போது வரை பிரதிவாதி தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் காலி இடம் என்று தான் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1வது சாட்சியாக யார் கையொப்பம் போட்டார்கள் என்றால் மதன் சார் போட்டார். 2வது சாட்சியாக எனது கணவர் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் சாட்சியாக கையொப்பம் போடும் போது அவரது முகவரி சந்திரன் த/பெ.ராமன் 290/3, மாரப்ப கவுண்டன் வலசு, தாழையூத்து, பழநி வட்டம் மற்றும் ஆதார் எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல பாப்பான்குளம் விலாசம் தான் கொடுத்தோம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள அ.வ.எண்.61/2019 வழக்கின் பிராதில் முதலாவது பரிகாரமாக வாதியின் பெயருக்கு சுவாதீனம் கொடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ள பட்டா 02.05.2022ம் தேதி பதிவிறக்கம் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

(7) கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்ட பின்பு சார் பதிவாளர் சொத்தை பார்வையிட்டாரா என்றால் பார்வையிடவில்லை. சார் பதிவாளர் சொத்தை பார்வையிட்டார் என்றும் அந்த சமயத்தில் பிரதிவாதியால் கட்டப்பட்ட வீடு இருந்தது என்றும் அதை மறைத்து நான் கிரையம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தொந்தரவு செய்தததது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. எப்போது புகார் கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. சுமார் 2 வருடங்களுக்கு முன்பு இருக்கும். 2019ம் வருடம் செல்லம்மாள் என் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்மந்தமாக எங்களை காவல் நிலையத்தில் அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரியல்ல. 15.09.2024ம் தேதி நான், எனது கணவர் சந்திரன், மருமகன் ரமேஷ் ஆகியோர் பிரதிவாதி வீட்டிற்கு சென்று அவரை அடித்து சொத்தில் இருந்து வெளியேற்றிவிட்டோம் என்றால் சரியல்ல. 16.09.2024ம் தேதி பிரதிவாதி செல்லம்மாள் கொமரலிங்கம் காவல் நிலையத்தில் எங்கள்

மீது புகார் கொடுத்து குற்ற எண். 201/2024 ன் படி பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பதிவு செய்யப்பட்டு நான் பிணையில் உள்ளேன் என்றும் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. செல்லம்மாள் என் கணவர், மருமகன் மற்றும் என் மீது கேஸ் கொடுத்தார். கொமரலிங்கம் காவல் நிலையத்தில் 2-3 மாதங்களுக்கு கையெழுத்து போட்டுவிட்டு செல்லுமாறு சொன்னார்கள். பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு CC 147/2024 என்று இந்த நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

(8) ஊருக்குள் என்னை மாசாணி என்று அழைப்பார்கள் என்றால் சரிதான் உண்மையான பெயர் மாசிலாமணி. கொமரலிங்கம் காவல் நிலையத்தில் எங்களை எதற்காக விசாரணை செய்தார்கள் என்றால் செல்லம்மாள் பிரச்சனை செய்தார்கள் இது சம்மந்தமாக போலீஸில் விசாரித்து நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்கள். செல்லம்மாள் என்ன பிரச்சனை செய்தார் என்றால் நான் குடியிருக்கும் வீட்டில் வந்து பிரச்சனை செய்தார். தாவாச் சொத்தில் பிரதிவாதி தான் சுவாதீனத்தில் உள்ளார் என்றும் அவரை நான் சட்டத்திற்கு புறம்பாக காலி செய்ய முயற்சி செய்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தான் கடந்த 15 வருடங்களாக தாவாச் சொத்தில் சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் நான் சுவாதீனத்தில் இல்லாத நிலையில் வழக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. செலவு தொகையுடன் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்